046574
30 SEP 2009

TP4
DD (TP)

சுருக்கம்

நிலம் – நில உரிமை மாற்றம் – தருமபுரி நகராட்சி – தருமபுரி மாவட்டம், செட்டிக்கரை கிராமத்தில் புல எண்.430இல், 124.0 ஹெக்டேர் மந்தைவெளி புறம்போக்கு நிலத்தினை தருமபுரி நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்காக முன் நுழைவு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்த் (நி.மு.7) துறை

அரசாணை (நிலை) எண்.339 நாள்: 11-09-2009.

படிக்கவும்:

1. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண் 8706/08, நாள் 29.6.08.
2. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.பி2/19585/08, நாள்10.10.08

********

ஆணை:

மேலே 1ல் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் தருமபுரி ஆட்சித் தலைவர், தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், செட்டிக்கரை கிராமத்தில் புல எண் 430–இல் 1.24.0 ஹெக்டேர் மந்தைவெளி புறம்போக்கு நிலத்தினை தருமபுரி நகராட்சிக்கு பாதாளசாக்கடைத் திட்டத்திற்காக நில உரிமை மாற்றம் செய்ய பிரஸ்தாப புலத்தை 31.12.07 அன்று புலத் தணிக்கை செய்து தருமபுரி வருவாய் கோட்ட அலுவலர் அறிக்கை அனுப்பி வைத்ததாகவும், அதன்படி தருமபுரி வட்டம், செட்டிக்கரை கிராமம் புல எண் 430–இல் மொத்த விஸ்தீரணம் 1.24.0 ஹெக்டேர் நிலம் மந்தைவெளி என கிராம கணக்குகளில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், பிரஸ்தாப புலத்தில் 8 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி 10 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருவதாகவும், மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கைகள் தனியே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேற்படி புல எண். பாதாளசாக்கடை திட்டத்திற்காக கீழ்க்கண்டவாறு உத்தேசமாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

| உட்பிரிவுக்கு முன் | | | உட்பிரிவுக்கு பின் | | |
|---|---|---|---|---|---|
| புல எண். | பாகுபாடு | விஸ்தீரணம் (ஹெக்டேரில்) | புல எண். | பாகுபாடு | விஸ்தீரணம் (ஹெக்டேரில்) |
| 430/1 | மந்தைவெளி | 1.24.0 | 430/1 | மந்தைவெளி | 0.54.0 |
| | | | 430/2 | ஆணையாளர் தருமபுரி நகராட்சி (பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம்) | 0.70.0 |

மேலும், பிரஸ்தாப புலத்தில் கிணறு கட்டிடங்கள், மரங்கள் ஏதும் இல்லை எனவும், இப்புலத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சிறிய ஓடை ஒன்று செல்கிறது எனவும், இதில் மழை காலங்களில் மட்டும் தண்ணீர் செல்லும் எனவும் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

3. மேலும், பிரஸ்தாப புலம் மந்தைவெளி என்பதால் அரசாணை (நிலை) எண்.186, கால்நடை பராமரிப்புத் துறை, நாள் 11.12.2001ன்படி நிலமாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்திற்கு ஈடாக கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்று நிலம் வழங்க பிட்டநூல் அள்ளி கிராமம் புல எண்.179/4இல் தீர்வை ஏற்படாத தரிசு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது எனவும், மேற்படி புலத்தில் சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க பொது மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும், இத்திட்டம் செயல்படுத்தும் பட்சத்தில் சுற்று சூழல் மற்றும் சுகாதீர் மாசுபடும் என அஞ்சுவதாகவும் இத்திட்டத்தினை நிறைவேற்றக் கூடாது என கடந்த 4.4.2008 அன்று செட்டிக்கரை ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர் எனவும் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

4. பிரஸ்தாப புலம் கால்நடை பராமரிப்புத் துறைக்கு உட்பட்ட மந்தைவெளி என்பதால், சென்னை கால்நடை பராமரிப்புத் துறை ஆணையர் அவர்களிடம் துறை இசைவு பெற தருமபுரி கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநரின் கருத்துரை கோரி கடிதம் அனுப்பப்பட்டு கருத்துரை எதிர்நோக்கப்படுகிறது எனவும், இது துறைகளுக்கு சம்பந்தப்பட்ட நிலமாக இருப்பின், சம்பந்தப்பட்ட துறை தலைமையின் இசைவு மற்றும் உள்ளாட்சி மன்றத்தின் தீர்மானமும் கண்டிப்பாக பெறப்படவேண்டும் என்று சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் அரசு புறம்போக்கு நிலங்களான தடை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்கு மேய்ச்சல் தரை, மயானம் ஆகியவற்றில் பிற துறைக்கு முன் நுழைவு அனுமதி வழங்குவதற்கு முன் அரசிடம் அனுமதி பெறவேண்டுமென அரசு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அரசு அவ்வப்போது விதிக்கும்

நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும் இத்திட்டம் நிறைவேற்ற தகுதியான வேறு இடம் இல்லையென்றும் தற்போது கோரியுள்ள செட்டிக்கரை கிராம புல எண்.430—லேயே பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் நீர் உந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்குமாறு கேட்டுத் துறையினர் கோரியுள்ளதாகவும், நில மாறுதலுக்கு சம்மந்தப்பட்ட செட்டிக்கரை ஊராட்சி மன்றம் செயல்படுத்தக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றியிருந்தாலும், பாதாள சாக்கடைத் திட்டம் என்பது அரசின் மிக முக்கியமான திட்டம் என்பதால் அதனை உடனடியாக நிறைவேற்றுவது அவசியமாகிறது எனவும் தெரிவித்துள்ளார். கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரின் இசைவினைப் பெற்று மேற்படி திட்டத்தை செயல்படுத்த ரூ.1.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசின் சிறப்புத் திட்டம் ஆதலால் கால்நடை பராமரிப்புத் துறை இசைவினை எதிர்நோக்கி சிறப்பு நேர்வாக கருதி அரசிடமிருந்து முன்நுழைவு அனுமதி பெற்று தருமாறு மாவட் ஆட்சித் தலைவர் கோரியுள்ளார்.

5. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரையினை ஏற்று முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு அரசுக்கு அனுப்பியுள்ளார்:-

(i) கேட்பு நிறுவனம் தருமபுரி நகராட்சி என்பதால் நிலத்திற்குரிய கட்டணத்தை செலுத்த தனது சம்மதத்தினை தெரிவித்துள்ளது.

(ii) நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டிய புலம் "மந்தைவெளி புறம்போக்கு" என்ற வகைப்பாடு உடையது;

(iii) விளாப்படிவம் முழுவதும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(iv) மாவட்ட வருவாய் அலுவலர் புலத்தணிக்கை செய்து, நிலத்தின் மதிப்பு ரூ.1 இலட்சத்திற்கு அதிகமாக நிர்ணயம் செய்யலாம் எனவும் வருவாய் நிலை ஆணை எண்.24(6)இன் கீழ் நில உரிமை மாற்றம் செய்யவும் பரிந்துரை செய்துள்ளார்;

(v) நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள புலத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட குடிசைகள் அகற்றப்பட்டுவிட்டது;

(vi) ஓடையிலிருந்து மழைக்காலங்களில் நீர்வழிப்பாதை வடக்கிலிருந்து தெற்காக செல்வதை அவ்வாறே பராமரிக்கவேண்டும்;

(viii) 'அ' அறிவிப்பு பிரகாரம் செய்யப்பட்ட அறிக்கையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

(ix) கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை வெளியிட்ட அரசாணை (நிலை) எண்.75 நாள் 28.5.07இல் உள்ள நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

எனவே, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ.1.35 கோடி தருமபுரி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், தெரிவித்துள்ளார். மேலும் தருமபுரி மாவட்டம், செட்டிக்கரை கிராமம் புல

எண்.430இல் 0.70.0 ஹெக்டேர் புறம்போக்கு நிலத்தினை தருமபுரி நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு முன் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்கலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளார்.

6. மேற்கண்ட சூழ்நிலையில், முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் பரிந்துரையினை அரசு ஆய்வு செய்து, அதனை ஏற்று, அதனடிப்படையில் தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்காக தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சி, செட்டிக்கரை கிராமத்தில் புல எண்.430இல் மந்தைவெளி புறம்போக்கு என வகைப்பாடு கொண்ட நிலத்தில் 0.70.0 ஹெக்டேர் நிலத்தினை நில உரிமை மாற்றம் பிரேரணையை நிலுவையில் வைத்து நிலக்கிரயம் செய்வதை முன்னிறுத்தி வருவாய் நிலையாணை 24(6)ன்கீழ் கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:

(அ) நிலக்கிரயம், உட்பிரிவுக் கட்டணம் போன்றவற்றை கேட்புத் துறை செலுத்தவேண்டும்;

(ஆ) பிரஸ்தாப புலம் மேய்க்கால் வகைபாடு கொண்டதால் அரசாணை (நிலை) எண்.186, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 11.12.2001 மற்றும் அரசாணை (நிலை) எண்.790 வருவாய்த் துறை நாள் 29.5.78இல் வெளியிடப்பட்ட நிபந்தனைகளுக்கு விலக்களிக்கப்படுகிறது;

(இ) தருமபுரி நகராட்சி தடையின்மைச் சான்று பெறப்பட வேண்டும்;

(ஈ) நிலம் சம்பந்தப்பட்ட ஊராட்சியின் பராமரிப்புக்கு விடவேண்டும்;

(உ) எந்த நோக்கத்திற்காக நிமாற்றம் செய்யப் படுகிறதோ, அதற்காக மட்டும் அந்நிலத்தை கேட்புத் துறை பயன்படுத்த வேண்டும்;

(ஊ) பிரஸ்தாப நிலமோ (அல்லது) அதன் ஒரு பகுதியோ தேவையில்லை எனில் அதை வருவாய்த் துறையிடம் மீண்டும் கேட்புத் துறை ஒப்படைக்க வேண்டும்.

7. மேலே பத்தி 6ல் உள்ள ஆணைக்கேற்ப மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தருமபுரி மாவட்ட ஆட்சியர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.

மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி மாவட்டம், தருமபுரி.

<u>நகல்:</u>
கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, சென்னை—9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை—9
வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9.
வருவாய்த்துறை செயலர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9.
வருவாய்த்துறை துணைச் செயலர் (நி.மு) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9.
இ.கோ/உ.திரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

19/9/09
பிரிவு அலுவலர்.